**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

# கேள்விகளுக்கான அழைப்பு

## ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)

IWWRMP

**செயற்றிட்ட இலக்கம்: P166865. கடன் இல. IDA-6619-LK**

1. இலங்கை சனநாயக, சோசலிசக் குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (உலக வங்கி) ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செலவுகளுக்காக (IWWRMP) கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

2. ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்ட பெறுகைக் குழுவின் சார்பாக 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள நீர் வளங்கள் சபையின் (WRB) கீழ் வேலை ஒப்பந்தங்களுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து ஒன்றிணைந்த நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை அழைக்கின்றார்.

**01ஆம் அட்டவணை**

| ஒப்பந்த இலக்கம் | பொதி இல. | வேலை விபரம் / ஒப்பந்தக் காலம் | CIDA பதிவு / விசேடத்துவம் | கேள்விப் பிணை முறி / செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) | சராசரி வருடாந்த நிர்மாண வேலைகளின் அளவு மற்றும் ஆகக் குறைந்த திரவச் சொத்துகள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| நீர் வளச் சபைக்கான மாகாண நிலக்கீழ் நீர் முகாமைத்துவப் பிரிவின் (GWMU) புதுப்பித்தல் வேலைகள் - மிகுதி வேலைகள் (LK-MOMDE-559503-CW-RFB) | 1 | அனுராதபுரத்திலுள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரம் விசேடத்துவம்: கட்டிட நிர்மாணம் | பிணை முறியின் பெறுமதி: ரூபா 180,000.00 செல்லுபடிக் காலம்: 2026-10-18ஆம் திகதி வரை (105 நாட்கள்) | 3,500.00 | 90 மில்லியன் மற்றும் 3 மில்லியன் |
| | 2 | வவுனியாவில் உள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | | பிணை முறியின் பெறுமதி: ரூபா 200,000.00 செல்லுபடிக் காலம்: 2026-10-18ஆம் திகதி வரை (105 நாட்கள்) | 3,500.00 | 14 மில்லியன் மற்றும் 3 மில்லியன் |
| | 3 | புத்தளத்திலுள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | | பிணை முறியின் பெறுமதி: ரூபா 200,000.00 செல்லுபடிக் காலம்: 2026-10-18ஆம் திகதி வரை (105 நாட்கள்) | 3,500.00 | 12 மில்லியன் மற்றும் 2 மில்லியன் |

3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கேள்வி ஆவணத்திலுள்ள பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான கேள்விதாரர் மேற்படி அட்டவணையில் வேலைகளுக்கு எதிரில் தரப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டிட நிர்மாண விசேடத்துவ துறையில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். கேள்விதாரர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பொதிகளுக்காக சுதந்திரமாக கேள்வி கோரலாம். ஆனால் CIDA பதிவு கொள்ளளவு எல்லையின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

4. கேள்வி ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices எனும் இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-07, இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, மகாவலி நிலையக் கட்டிடம், 2ஆம் தளம், **IWWRMP** செயற்றிட்டம், சிரேஷ்ட செயற்றிட்ட நிபுணரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2026-07-06ஆம் திகதி முதல் 2026-07-24ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இதே முகவரியில் முன்னறிவிப்பொன்றைச் செய்து கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொடர்பிலக்கம்: 0112691163)

6 வளமுள்ள கேள்விதாரர்கள் 2026-07-06ஆம் திகதி முதல் 2026-07-24ஆம் திகதி வரையிலான வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரையில் முன்னறிவிப்பொன்றைச் செய்து (தொடர்பிலக்கம்: 0112691163) மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி (தொகைக்கு 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 செயற்றிட்டப் பணிப்பாளருக்கு முகவரியிட்டு நிறுவனக் கடிதத் தலைப்பின் ஊடாக எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து அல்லது இலங்கை வங்கியின் ஹைட்பார்க் கோணர் கிளையில் ஒன்றிணைக்கப்பட்ட நீரேந்து மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டத்தினால் பேணப்படும் **7042633** எனும் கணக்கிலக்கத்திற்கு இயைபுடைய மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு சகிதம் iwwrmp@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துமூலமான கோரிக்கையைச் சமர்ப்பித்து ஒரு தொகுதி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கேள்வி முன்னோடிக் கூட்டம் மற்றும் வேலைத்தள விஜயம் இடம்பெறும். கேள்விதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**02ஆம் அட்டவணை**

| ஒப்பந்தப் பெயர் (ஒப்பந்த இலக்கம்) | பொதி இலக்கம் | வேலை விபரம் | வேலைத் தள விஜயம் | கேள்வி முன்னோடிக் கூட்டம் | கேள்விகள் முடிவுறுத்தப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| நீர் வளச் சபைக்கான மாகாண நிலக்கீழ் நீர் முகாமைத்துவப் பிரிவின் (GWMU) புதுப்பித்தல் வேலைகள் - மிகுதி வேலைகள் (LK-MOMDE-559503-CW-RFB) | 1 | அனுராதபுரத்திலுள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | திகதி: 2026-07-14 நேரம்: மு.ப. 9.00 மணி அமைவிடம்: நீர் வளச் சபை, பிராந்திய அலுவலகம், கொரக்கஹவெவ, பண்டுலகம, அனுராதபுரம். (GPS :8.318229N,80.344408E) | திகதி: 2026-07-16 நேரம்: மு.ப. 10.00 மணி அமைவிடம்: மாநாட்டு அறை, **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 | திகதி: 2026-07-27 நேரம்: பி.ப. 2.00 மணி அமைவிடம்: மாநாட்டு அறை, **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 |
| | 2 | வவுனியாவில் உள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | திகதி: 2026-07-14 நேரம்: பி.ப. 3.00 மணி அமைவிடம்: நீர் வளச் சபை, பிராந்திய அலுவலகம், தேக்கவத்த, வவுனியா. (GPS :8.740430N,80.344408E) | | |
| | 3 | புத்தளத்திலுள்ள GWMU வின் விரிவாக்கம் / 120 நாட்கள் | திகதி: 2026-07-15 நேரம்: மு.ப. 9.00 மணி அமைவிடம்: நீர் வளச் சபை, பிராந்திய அலுவலகம், சென் மேரிஸ் மாவத்தை, சேனைக்குடியிருப்பு, புத்தளம். (GPS :8.02730N,79.84769797E) | | |

8. கேள்வி ஆவணத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரரினால் கையொப்பமிடப்பட்டு அவரது முத்திரைக் குறி பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. நகல் பிரதிகளுடனான கேள்விகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு 2ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் செயற்றிட்டப் பணிப்பாளர், **IWWRMP** செயற்றிட்டம், 2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அதன் பின் கேள்விகள் உடன் திறக்கப்படும். கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவரது பிரதிநிதிகளான இரண்டுக்கு (2) மேற்படாத நபர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒன்றிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2ஆம் தளம், மகாவலி நிலையக் கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2026-07-05.**